| | வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனை அறிக்கை<br>இணைந்து வழங்குபவர்கள்<br>பிராந்திய வானிலை மையம் சென்னை - இந்திய வானிலைத் துறை<br>ம. சா. சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும்<br>ரெட்டியார்சத்திரம் விதை உற்பத்தியாளர்கள் சங்கம் | | | | | |
|---|---|---|---|---|---|---|
| MSSRF<br>Science for Sustainable Development | மாவட்டம் : | தேனி | காலம் : | 15/05/2024 | முதல் | 19/05/2024 |
| | அறிக்கை எண் : | 039/ 2024 | வெளியீட்டு நாள் : | | 14/05/2024 | |

## தேனி மாவட்டத்தின் கடந்த வார வானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 37°-40° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 25°-26° செல்சியஸ் ஆகவும் பதிவானது. மேலும் மழை பெறப்பட்டது.

| கடந்தவார வானிலை (09.5.2024 முதல் 13.05.2024) | | | | | | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு – 19-05-22024- 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 09/05 | 10/05 | 11/05 | 12/05 | 13/05 | தேதி | நாள்-1<br>15/05 | நாள்-2<br>16/05 | நாள்-3<br>17/05 | நாள்-4<br>18/05 | நாள்-5<br>19/05 |
| 7.8 | 29.9 | 1.1 | 3.1 | 14.4 | மழை (மி.மீ) | 28 | 31 | 34 | 29 | 14 |
| 41 | 39 | 40 | 37 | 37 | அதிக பட்ச வெப்பநிலை (செல்) | 34 | 32 | 31 | 30 | 30 |
| 27 | 27 | 25 | 26 | 26 | குறைந்த பட்ச வெப்பநிலை (செல்) | 25 | 23 | 22 | 21 | 21 |
| 6 | 7 | 5 | 5 | 5 | மேக மூட்டம் (ஆக்டா) | 8 | 8 | 6 | 8 | 8 |
| 67 | 73 | 82 | 80 | 70 | அதிக மற்றும் குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (சதவீதம்) | 80 | 80 | 80 | 80 | 80 |
| 57 | 69 | 84 | 54 | 71 | | 40 | 60 | 50 | 50 | 50 |
| 11 | 6 | 6 | 8 | 11 | காற்றின் வேகம் (கி.மீ/மணி ) | 4 | 4 | 4 | 6 | 10 |
| தென் கிழக்கு | தென் கிழக்கு | கிழக்கு | தென் கிழக்கு | மேற்கு | காற்றின் திசை | வட கிழக்கு | தென் மேற்கு | மேற்கு | தென் மேற்கு | மேற்கு |

## குறுஞ்செய்தி :

மாவட்டத்தின் ஒரு சில இடங்களில் மே 15, 16, 17, 18 மற்றும் 19 தேதி மிதமான மழைக்கு வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலையானது 30°-34° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலையானது 21° - 25° செல்சியஸ் ஆகவும் பதிவாகலாம். வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். மணிக்கு 4 முதல் 10 கி.மீ வேகத்தில், வடகிழக்கு, தென்மேற்கு மற்றும் மேற்கு திசைகளிலிருந்து காற்று வீசக்கூடும்.

## பொது ஆலோசனை:

மாவட்டத்தின் ஒரு சில இடங்களில் மே 15, 16, 17 மற்றும் 18 தேதி கனமழை பெய்ய வாய்ப்பு. விவசாயிகள் துரிதமாக செயல்பட்டு நீர் வரத்து வாய்க்கால்கள், பண்ணைக்குட்டைகள் மற்றும் நீர்நிலைகளை சரி செய்து மழைநீர் சேகரிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும். இந்த காலகட்டத்தில், உரமிடுதல் மற்றும் பூச்சிமருந்து தெளிக்கும் வேலைகளை ஒத்தி வைக்கும்படியும், விளைநிலங்களில் மழைநீர் தேங்கி பயிர்களை சேதப்படுத்தாத அளவில் தேவையான வடிகால் வசதிகளை ஏற்படுத்தி கொள்ளும்படியும், கால்நடைகளை மேய்ச்சலுக்கு வெளியில் அனுப்பாமலும், மின்கம்பம் மற்றும் மரங்களில் கட்டாமலும் பாதுகாப்பாக கொட்டகைகளில் கட்டி வைக்கும்படியும் கேட்டுகொள்ளப் படுகிறார்கள்.

முதல் மிதமான மழை பெய்ய வாய்ப்பு. மேலும், மணிக்கு 30 முதல் 50 கி.மீ வேகத்தில் தரைக் காற்று வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுவதால், விவசாயிகள் வாழை மரங்களுக்கு முட்டு கொடுத்தல், பப்பாளி, கொய்யா, முருங்கை பயிர்களுக்கு மண் அனைத்தல், கரும்பு பயிருக்கு விட்டம் கட்டுதல் போன்ற பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவும். கொடி வகை பயிர்பந்தல்களில் துரு பிடித்து பழுதடைந்துள்ள கம்பிகள் மற்றும் தூண்களை கண்டறிந்து சரி செய்யவும். போதுமான முட்டுகளை கொடுக்கவும். கால்நடைகளை மேய்ச்சலுக்கு வெளியில் அனுப்பாமல், மின்கம்பம் மற்றும் மரங்களில் கட்டாமலும் பாதுகாப்பாக கொட்டகைகளில் கட்டி வைக்கும்படியும் கேட்டு கொள்ளப்படுகிறார்கள்.

கடந்த சில நாட்களாக, ஒரு சில இடங்களில் கோடை மழை பெய்துள்ளது. அடுத்த சில நாட்களுக்கும் மழை எதிர்பார்க்கப்படுவதால், விவசாயிகள் தங்கள் நிலத்தில் கோடை உழவுப் பணியினை மேற்கொண்டு மழை நீர் வீணாகாமல் நிலத்தினுள் சேமிப்பதோடு, மண்ணில் மறைந்துள்ள பூச்சிகளின் முட்டைகள் மற்றும் கூட்டுப்புழுக்களை நிலத்தின் மேற்பரப்பிற்கு கொண்டுவந்து சூரிய ஒளியின் மூலம் அழிக்கலாம்.

**எதிர்பார்க்கப்படும் வானிலைக்கேற்ற வேளாண் ஆலோசனைகள்**
**முக்கிய பயிர்கள் : மா, திராட்சை, கால்நடை.**

**மா:**
மாவில் பூ, பிஞ்சுகள் உதிர்வது மற்றும் காய்ப் பிடிப்புக்கும் திறனை அதிகரிக்க செய்வது முக்கியமானதாகும். என்.ஏ.ஏ என்ற வளர்ச்சி ஊக்கி மருந்தை 20 பி.பி.எம் என்ற அளவில் இரண்டு முறை தெளிக்க வேண்டும்.

இவ்வாறு தெளிப்பதால் பிஞ்சுகள் உதிர்வது தடுக்கப்பட்டு காய்ப் பிடிப்பு அதிகரிக்கும்.

பூ பூக்காத மரங்களுக்கு 1லிட்டர் தண்ணீருக்கு 5 கிராம் யூரியா அல்லது 1லிட்டர் தண்ணீருக்கு 10 கிராம் பொட்டாசியம் நைட்ரேட் என்ற விகிதத்தில் கரைசல் தயாரித்து ஏதேனும் ஒன்றை தெளிக்கவேண்டும்.

**திராட்சை:**
தற்போது திராட்சை பயிரில் கவாத்து செய்வதற்கு ஏற்ற காலமாகும். பொதுவாக பன்னீர், பச்சை திராட்சை மற்றும் வீரிய இரகங்களுக்கு நான்கு மொட்டு நிலையில் கவாத்து செய்ய வேண்டும். தாம்சன் விதையில்லா இரகங்களுக்கு இரண்டு மொட்டு நிலையில் செய்ய வேண்டும்.

எனினும் கணுக்களில் உள்ள மொட்டுக்களை ஆய்வு செய்து அதன்படி கவாத்து செய்தால் நன்மை பயக்கும். நலிந்த மற்றும் வளராத கொடிகளை ஒன்று அல்லது இரண்டு மொட்டுகள் விட்டு கவாத்து செய்தால் கொடிகள் நன்கு வளர்ச்சியடையும்.

மழை காலப் பயிரில் மே - ஜூன் மாதங்களில் காவத்து செய்ய வேண்டும்.

**கால்நடை:**
கோழிகளுக்கு பி-காம்ப்லெக்ஸ் திரவத்தினை குடி நீருடன் கலந்து அளிப்பதால் வெப்ப தாக்க அழற்சியை குறைக்கலாம்.

வெப்ப அழுத்தத்தை சமாளிக்க கோழி கொட்டகையின் ஒரு அலகு (யூனிட்) பகுதியில் பறவைகளின் எண்ணிக்கையை குறைத்து வைக்கும்படி விவசாயிகள் அறிவுறுத்தப்படுகிறார்கள்.